# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
## நான்காம் தவணைப் பரீட்சை - 2022
# Conducted by Field Work Centre, Thondaimanaru
## 4th Term Examination - 2022

FWC

| | | | | |
|---|---|---|---|---|
| புவியியல் - I<br>Geography - I | Three Hours<br>Gr. 13 (2022) | 22 | T | I |

**மேலதிகவாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்**

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள்:**

- இவ்வினாத்தாள் மூன்று பகுதிகளைக் கொண்டது.
- பகுதி I, 40 பல்தேர்வு வினாக்களைக் கொண்டுள்ளது. பகுதி I இற்கான விடைகள் இத்தாளிலேயே எழுதப்பட வேண்டும்
- பகுதி I இல் ஒவ்வொரு சரியான விடைக்கும் ஒரு புள்ளி வீதம் உரித்தாகும்.
- பகுதி II இல் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- பகுதி III இல் நான்கு வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து விடையளித்தல் வேண்டும்.
- பகுதி I, பகுதி II, பகுதி III ஆகியவற்றிற்குரிய விடைத்தாள்கள் ஒன்றாக இணைக்கப்பட்டு கையளிக்கப் பட வேண்டும்

## பகுதி - I

- ஒவ்வொரு வினாவுக்குமான சரியான விடையினைத் தெரிவு செய்து, அதற்குரிய இலக்கத்தினை எதிரேயுள்ள புள்ளிக்கோட்டில் எழுதுக.

1. இலங்கையின் 1:50, 000 என்ற அளவுதிட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படத்தில், இரு நகரங்களுக்கு இடையிலான தூரம் 7.5 cm எனக்காட்டப்பட்டிருந்தால், நகரங்களுக்கு இடையிலான உண்மைத் தூரம் யாது?
   (1) 05 km (2) 4km (3) 3.5 km (4) 3km (5) 2.5km (…...)

2. இடவிளக்கப்படத்தில் பயன்படுத்தப்படுகின்ற பண்பாட்டம் சங்களுடன் தொடர்புடைய விடயம் யாது?
   (1) தரைத்தோற்ற வேறுபாடுகளும் நீர் வடிகால் அம்சங்களும்
   (2) தரைத்தோற்ற வேறுபாடுகளும் பயிர் நிலங்களும்
   (3) தரைத்தோற்ற வேறுபாடுகளும் போக்குவரத்து வலைப் பின்னலும்
   (4) போக்குவரத்து வலைப் பின்னலும் குடியிருப்புப் பரம்பலும்
   (5) நீர் வடிகால் அம்சங்களும் குடியிருப்புப் பரம்பலும் (…...)

3. தொலையுணர்வு செயன்முறையில் உணர்விகள் பொருத்தப்பட்ட வான்வெளி மேடைகள் இரண்டினைப் பின்வரும் விடைகளிலிருந்து தெரிக.
   (1) ஹெலிகெப்டர், சிறியரக விமானம்
   (2) அசையும் வாகனம், வான்வெளி விமானம்
   (3) ஏவுகணைகள், கோபுரங்கள்
   (4) கோபுரங்கள், அசையும் வாகனம்
   (5) அசையும் வாகனம், விண்வெளி ஓடம் (…...)

4. தரைத்தோற்றப்படம் ஒன்றில் நிலப்பயன்பாடு தொடர்பான விபரங்களை மட்டும் பிரித்தெடுத்து ஆய்வு செய்வதற்குப் பயன்படுத்தப்படுகின்ற படவரை கலையியல் நுட்ப முறை
(1) படம்
(2) இடவிளக்கப்படம்
(3) கருப்பொருள் படம்
(4) பூகோள இடநிலைப்படுத்தல் முறைமை
(5) புவியியல் தகவல் முறைமை (…...)

5. ஓர் இடத்தின் அமைவிடத்தினை ஆள்கூறுகளின் அடிப்படையில் குறிப்பது.
(1) சார்பு அமைவு (2) தனி அமைவு (3) அளவுத்திட்டம்
(4) படக்குறி விளக்கம் (5) புற எல்லைத் தகவல் (…...)

6. 1:50,000 இடவிளக்கப்படத்தில் வன ஒதுக்குப் பிரதேசத்தினைக் குறித்துக் காட்டுவதற்குப் பயன்படுத்தப்படும் நிறம்
(1) பச்சை (2) சிவப்பு (3) கருப்பு
(4) கபிலம் (5) நீலம் (…...)

7. வரைபுகள், அட்டவணைகள், படங்களை அமைக்கும் போது கட்டாயமாகக் குறிப்பிட வேண்டிய விடயம்
(1) முதல்நிலைத் தரவு என்பது
(2) இரண்டாம் நிலைத் தரவு என்பது
(3) திசை
(4) மூலம்
(5) சார்பமைவு (…...)

8. அளவு சார் தரவு என்பது
(1) எண்ணிக்கை அடிப்படையில் முன்வைக்கப்படாது
(2) தரவுகள் உள்ளடக்கியிருக்கும் பெறுமதிக்கு ஏற்ப வகைப்படுத்தப்படுவது
(3) ஒழுங்கு படுத்தப்படாமல் விசேட பெறுமானங்களைக் கொண்டிருக்கும்
(4) எண்ணிக்கை அடிப்படையில் விளக்கக் கூடிய தரவுகள்
(5) ஒரு குறிப்பிட்ட நோக்கத்திற்காகச் சேகரிக்கப்படும் தரவு (…...)

9. ஆய்வில் பயன்படுகின்ற குடி என்பது.
(1) புள்ளி விபர அவதானிப்பில் ஆய்வின் மொத்த விடயமாகக் கருதப்படுகின்ற முழுவிடயத்தினையும் தவிர்ப்பது
(2) குடியை பிரதிநிதித்துவம் செய்யும் வகையில் தரவு சேகரிப்பது
(3) ஆய்விற்குத் தேவையான முழுத்தகவலையும் பெற்றுக்கொள்ளக்கூடிய வகையில் தகவல் சேகரிப்பது
(4) தெரிவு செய்யப்பட்டவர்களிடம் இருந்து வினக் கொத்து மூலம் தகவல் சேகரிப்பது
(5) உபகரணங்கள் மூலம் தகவல் சேகரிப்பது (…...)

10. பின்வருவனவற்றில் இரண்டாம் நிலைத் தரவு சேகரிக்கப்படுகின்ற நுட்ப முறைகளில் ஒன்று
(1) அவதானிப்பு (2) அளவீடுகள் (3) ஆய்வுகள்
(4) பங்கேற்ப அவதானிப்பு (5) இணையத்தளம் (…...)

11. மூன்றாம் நிலை நிலவுருவங்களை மாத்திரம் கொண்டுள்ள விடைத் தொகுதியைத் தெரிவு செய்க.
(1) கடற்குவடுகள், கூர்முடி உச்சி, பானைக் குழிகள்
(2) மடிப்பு மலைகள், பிளவுப்பள்ளத்தாக்கு, மணற்குன்று
(3) ஆற்றுமியாந்தர், சமுத்திர வடிநிலங்கள், பரிசை நிலங்கள்
(4) சமுத்திர வடிநிலங்கள், கண்டத்திணிவுகள், மடிப்பு மலைகள்
(5) எரி மலைகள், பிளவுப்பள்ளத்தாக்கு, யடாங்கு (…...)

12. ஆறு அரித்த பருப் பொருட்களைக் கொண்டு செல்லும் முறைகளை மாத்திரம் உள்ளடக்கியிருக்கும் விடைத்தொகுதி
(1) தொங்கல், தாவிக்குதித்தல், தேய்த்தல், உருட்டிச் செல்லல்
(2) கரைசல், தாவிக்குதித்தல், உருட்டிச் செல்லல், தொங்கல்
(3) கரைசல், உடைந்துதேய்த்தல், உருட்டிச் செல்லல், தொங்கல்
(4) உடைந்து தேய்த்தல், சுரண்டல், கரைசல், குறையாதல்
(5) சுரண்டல், கரைசல், உருட்டுதல், தாவிக்குதித்தல் (…...)

13. ஆபிரிக்கத் தகட்டினை சூழ்ந்து காணப்படும் நான்கு புவித்தகடுகள் எவை?
(1) தென் அமெரிக்கத்தகடு, வடஅமெரிக்கத்தகடு, அந்தாட்டிக் தகடு, இந்தோ அவுஸ்ரேலிய தகடு
(2) கரூபியன் தகடு, நாஸ்கா தகடு, பிலிப்பைன்ஸ் தகடு, இந்தோ அவுஸ்ரோலியத் தகடு
(3) தென் அமெரிக்கத்தகடு, கொக்கோஸ் தகடு, பசுபிக்தகடு, ஸ்கோசியா தகடு
(4) நாஸ்கா தகடு, அந்தாட்டிக் தகடு, தென் அமெரிக்கத் தகடு, கொக்கோஸ் தகடு
(5) இந்தோ அவுஸ்ரோலியத் தகடு, கொக்கோஸ் தகடு, ஸ்கோசியா தகடு, பசுபிக்தகடு
(…...)

14. புவியின் அகலக் கோட்டு வெப்பநிலைப்பரம்பலின் படி கடல் நீர் வெப்பம் அதிகமாகக் காணப்படும் காலநிலைவலயம்
(1) ஆட்டிக் பகுதி
(2) அந்தாட்டிக் பகுதி
(3) இடைவெப்பப்பகுதி
(4) அயனப் பகுதி
(5) மத்திய தரைக் காலநிலைப் பகுதி (…...)

15. கெப்பனின் காலநிலைப் பாகுபாட்டின் படி மழை வீழ்ச்சியை விட உயர் ஆவியாகக்கம் நிகழும் காலநிலை வகை
(1) A (2) E (3) C (4) D (5) B (…...)

16. இலங்கையின் சிங்கராஜா வனம் அமைந்துள்ள கலநிலை வலயம் எது?
(1) உயர்நில ஈர வலயம் (2) தாழ்நில ஈர வலயம்
(3) தாழ்நில உலர் வலயம் (4) உலர்நில உலர் வலயம்
(5) அரை வரள் வலயம் (…...)

17. இலங்கையின் தென்மேற்குப் பருவக்காற்றின் போக்கில் காற்று ஒதுக்குப் பக்கத்தில் இருக்கும் காலநிலை வலயம் எது?
(1) உயர்நில ஈர வலயம் (2) அரை வரள் வலயம்
(3) உயர்நில உலர் வலயம் (4) தாழ்நில உலர் வலயம்
(5) தாழ்நில ஈர வலயம் (…...)

18. பூகோள பச்சை வீட்டு வாயுக்களின் வெளியேற்றத்தில் பங்களிப்புச் செய்யும் நான்கு துறைகள் ஏறுவரிசையில்
(1) விவசாயம், காடழிப்பு, கைத்தொழில், வலு
(2) வலு, கைத்தொழில், காடழிப்பு, விவசாயம்
(3) கைத்தொழில், வலு, காடழிப்பு, விவசாயம்
(4) காடழிப்பு, விவசாயம், கைத்தொழில், வலு
(5) விவசாயம், வலு, கைத்தொழில், காடழிப்பு (…...)

19. புவிக் கோளத்தில் காணப்படும் நன்னீரின் சதவீதம்.
(1) 97.5% (2) 71% (3) 68% (4) 30% (5) 2.5% (…...)

20. இலங்கையின் உள்ளக நீர்த்தோக்கங்களில் ஏறத்தாழ 731 சதுர கிலோ மீற்றர்கள் பரந்துள்ள மாகாணம்
(1) வடமாகாணம் (2) மேல் மாகாணம் (3) வட மத்திய மாகாணம்
(4) கிழக்கு மாகாணம் (5) தென் மாகாணம் (…...)

21. வட அகலக்கோடு 10 பாகை, தென் அகலக்கோடு 10 பாகைக்கு இடையில் பரந்துள்ள உயிர்ப் பெருந்திணிவு
(1) மத்திய தரைக் காடுகள் (2) இடைவெப்ப வலயக் காடுகள்
(3) தூந்திரக் காடுகள் (4) பாலை வனங்கள்
(5) அயன மழைக்காடுகள் (…...)

22. வட அமெரிக்காவின் கலிபோர்ணியா தென்னாபிரிக்காவின் கேப்ரவுண் பகுதிகளில் பரந்துள்ள காடுகள்
(1) அயன மழைக் காடுகள் (2) மத்திய தரைக் காடுகள்
(3) இடைவெப்பக் காடுகள் (4) தைக்கா காடுகள்
(5) தூந்திராக் காடுகள் (…...)

23. வெனசுவெலாவில் பிரதானமாகப் பரந்துள்ள அயன வலயபுல் நிலம் எது?
(1) சவன்னா (2) கம்பொஸ் (3) ஸ்ரெப்பீஸ்
(4) லானோஸ் (5) பம்பாஸ் (…...)

24. பின்வருவனவற்றிலிருந்து குளிர்பாலைவனங்கள் அடங்கிய விடையைத் தெரிக.
(1) கோபி, அற்றகாமா
(2) சகாரா, நெவடா இடகோ
(3) ஒறிகோன், கலகாரி
(4) பற்றக்கோனியா, நமீபியா
(5) மேற்கு அவுஸ்ரேலிய பாலைவனங்கள், தார் (…...)

25. அமில மழைப் பொழிவு காரணமாக அதிகளவு பாதிக்கப்படும் உயிர்ப் பெருந்திணிவு எது?
(1) மத்திய தரைக் காட்டு உயர்ப்பெருந்திணிவு
(2) அயன மழைக் காட்டு உயிர்ப்பெருந்திணிவு
(3) இடைவெப்ப உயிர்ப்பெருந்திணிவு
(4) தைக்கா உயிர்ப்பெருந்திணிவு
(5) பாலைவன உயிர்ப்பெருந்திணிவு (…...)

26. பிறப்பு வீதம், இறப்பு வீதத்தினை விட அதிகரிப்பதனால் ஏற்படுவது

(1) குடித்தொகை வளர்ச்சி (2) குடித்தொகை அடர்த்தி

(3) குடித்தொகை இடப்பெயர்வு (4) குடித்தொகை உள்வரவு

(5) முதியோர் தங்கிவாழ்தல் அதிகம் (…...)

27. உலகில் குடித்தொகை அடர்த்தி கூடிய வலயங்கள் அதிகமாக காணப்படும் கண்டம் எது?

(1) ஆபிரிக்கா (2) ஐரோப்பா (3) ஆசியா

(4) அவுஸ்ரேலியா (5) அந்தாட்டிக்கா (…...)

28. இலங்கையில் 65 சதவீமக்கள் வாழ்கின்ற காலநிலை வலயம் எது?

(1) தாழ்நில ஈர வலயம் (2) தாழ்நில உலர் வலயம் (3) அரை வரள் வலயம்

(4) உயர்நில உலர் வலயம் (5) உயர்நில ஈர வலயம் (…...)

29. பின்வருவனவற்றுள் இலங்கையின் திட்டமிட்ட குறியிருப்பு எது?

(1) கொழும்பு நகரம் (2) காலி நகரம் (3) யாழ்ப்பாண நகரம்

(4) தெஹியத்த கண்டிய நகரம் (5) குருநாகல் நகரம் (…...)

30. இலங்கையின் நகர அபிவிருத்தி அதிகார சபையின் கருத்தின் படி கொழும்பு பெரு நகரப் பிரதேசம் என்பது

(1) கொழும்பு மாவட்டம்

(2) கொழும்பு, களுத்துறை, கம்பகா மாவட்டங்களை உள்ளடக்கிய பிரதேசம்

(3) கொழும்பு, ஸ்ரீஜெயவர்த்தன புர கோட்டைக்கு உட்பட்ட பிரதேசம்

(4) கொழும்பு நகர எல்லைக்கு உட்பட்ட பிரதேசம்

(5) மத்திய கொழும்பு, அதன் உப நகரப் பகுதிகள். (…...)

31. உலகில் உள்ள நாடு ஒன்று நகர மயமாதலுக்கு உட்பட்டுள்ளது எனக் கருதப்பட வேண்டுமாக இருந்தால் அந்நாட்டின் நகரமயமாதல் வீதம்.

(1) 50% மேற்பட்டதாகக் காணப்பட வேண்டும்.

(2) 60% மேற்பட்டதாகக் காணப்பட வேண்டும்.

(3) 40% மேற்பட்டதாகக் காணப்பட வேண்டும்.

(4) 30% மேற்பட்டதாகக் காணப்பட வேண்டும்.

(5) 20% மாகக் காணப்பட வேண்டும். (…...)

32. கிராமப் பகுதிகளில் இருந்து மக்களை வெளியேற்றுகின்ற தள்ளு விசைக் காரணிகள் இரண்டினை உள்ளடக்கிய விடை

(1) உட்கட்டமைப்பு வசதி, உயர் வாழ்க்கை மட்டம்

(2) வறுமை, வேலையின்மை

(3) உட்கட்டமைப்பு வசதி, வறுமை

(4) அரசியல் காரணிகள், உயர் வாழ்க்கை மட்டம்

(5) வேலையின்மை, உட்கட்டமைப்பு வசதி (…...)

33. நிலச் சீரழிவினை ஏற்படுத்துகின்ற இரண்டு மானிட நடவடிக்கைகள்

(1) வறட்சி, வெள்ளப்பெருக்கு

(2) கால் நடைகளின் அதிக மேச்சல், வறுமை

(3) ஓரினப்பயிர்ச் செய்கை, கால்நடைகளின் அதிக மேச்சல்

(4) சூறாவளி, வறுமை

(5) சூறாவளி, வெள்ளப்பெருக்கு (…...)

34. இலங்கையில் அறுவடையின் பெரும் தொகையான பகுதி நுகர்விற்காகப் பயன்படுத்தப்படுகின்ற வரத்தகப்பயிர்

(1) தேயிலை (2) கறுவா (3) இறப்பர்

(4) தென்னை (5) கோப்பி (…...)

35. பின்வருவனவற்றில் சுரங்கக் கைத்தொழில் வகைகள் உள்ளடக்கப்படுவது

(1) மோட்டார் வாகனக் கைத்தொழில் கப்பல் கட்டும் கைத்தொழில்

(2) விமானக் கைத்தொழில், இலத்திரனியல் கைத்தொழில்

(3) நிலக்கரி, கனிய நெய்

(4) இரும்புத்தாது, மோட்டார் வாசனக் கைத்தொழில்

(5) இயற்கைவாயு, கப்பல் கட்டும் கைத்தொழில் (…...)

36. உலகில் பெருமளவில் பயன்படும் சக்தி மூலம்

(1) நிலக்கரி (2) காற்று சக்தி (3) சூரிய சக்தி

(4) பொற்றோலியம் (5) கடல் அலை (…...)

37. இலங்கையின் மைக்கா வகைக் காரியப்படிவுகளை 2013 இல் அதிகளவில் கொள்வனவு செய்த நாடு

(1) ஜப்பான் (2) இந்தியா (3) ரஷ்யா

(4) சீனா (5) ஐக்கிய அமெரிக்கா (…...)

38. இந்தியாவின் மும்பாய் பூனே கைத்தொழில் வலயத்தில் கைத்தொழில்களை இயக்குவதற்குப் பயன்படுத்தப்படுகின்ற சக்தி வளம்

(1) நிலக்கரி (2) கனிய எண்ணெய் (3) மின் சக்தி

(4) அணு சக்தி (5) விறகு (…...)

39. பின்வரும் கைத்தொழில்களில் உழைப்பு சார் கைத்தொழிலாக அமைவது

(1) விமான பரும்படியாக்கம், கப்பல் கட்டுதல்

(2) மோட்டார் வாகனம், ஆடை தயாரிப்பு

(3) இரும்புருக்குக் கைத்தொழில், மோட்டார் வாகனம்

(4) ஆடை தயாரிப்பு, இரும்புருக்குக் கைத்தொழில்

(5) இரும்புருக்குக் கைத்தொழில், ஆயுத உற்பத்தி (…...)

40. போக்குவரத்தினால் வளர்ச்சியடைந்த ஜப்பானின் கைத்தொழில் நகரம்.

(1) ஓசக்கா (2) கயாகோ (3) டோக்கியே

(4) கடோமா (5) கோமே (…...)

# பகுதி - II

**அறிவுறுத்தல்கள்:**
- பகுதி II இரண்டில் உள்ள இரண்டு வினாக்களுக்கும் விடையளித்தல் வேண்டும்.
- பகுதி III இல் நான்கு வினாக்கள் தரப்பட்டுள்ளன. அவற்றுள் இரண்டு வினாக்களைத் தெரிவு செய்து விடையளித்தல் வேண்டும்.
- இவ் வினாத்தாளுக்கு விடையளிப்பதற்காக இலங்கையின் 1: 50,000 அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப்படத்தின் ஒரு பகுதியும், உலகப்புறவுருவப்படமும் வழங்கப்படும்

*1.* இலங்கை நிலஅளவைத் திணைக்களத்தினால் வெளியிடப்பட்ட **1: 50000** அளவுத்திட்டத்தில் அமைந்த இடவிளக்கப் படத்தின் ஒருபகுதி உமக்குத் தரப்பட்டுள்ளது. அப்படத்தினைப் பயன்படுத்திப் பின்வரும் வினாக்களுக்கு விடை எழுதுக.

**குறிப்பு :**
✶ விடைத்தாளில் தொடர்புடைய வினா இலக்கத்தினையும் அதன் உபபிரிவு இலக்கத்தினையும் தெளிவாகக் குறிப்பிடுதல் வேண்டும்.
✶ இடவிளக்கப்படத்தின் மேல் விடைகள் எழுதப்படக்கூடாது.
✶ உமது விடைத்தாளுடன் தரப்பட்டுள்ள இடவிளக்கப் படத்தினை இணைக்க வேண்டாம்.

(i) *1 – 4* வரை இலக்கமிடப்பட்டிருக்கும் பௌதிக பண்பாட்டம்சங்களைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) நாற்பக்கல் A இல் காணப்படும் போக்குவரத்து வீதிகள் இரண்டினைப் பெயரிடுக. *(01 புள்ளி)*

(iii) x – y ஆகிய புள்ளிகளை இணைக்கும் பகுதிக்கான குறுக்குப் பக்கப் பார்வை (Cross – secrion) ஒன்றினை வரைக. *(03 புள்ளிகள்)*

(iv) இப்பிரதேசத்தின் நெற் செய்கைப் பரம்பலைத் தீர்மானித்த பௌதிக மானிடக் காரணிகள் இரண்டினை விளக்குக. *(05 புள்ளிகள்)*

(v) உமக்கு வழங்கப்பட்ட பிரதேசத்தில் காணப்படும் குடியிருப்புப் பாங்கினைச் சுருக்கமாக விபரிக்குக. *(04 புள்ளிகள்)*

(vi) இப்பிரதேசத்தில் அதிகளவில் செய்கை பண்ணப்படும் பெருந்தோட்டப் பயிர் எது? *(01 புள்ளி)*

(vii) (a) இப்பிரதேசத்தில் வாழும் மக்களால் பின்பற்றப்படுகின்ற நான்கு சமயங்களைத் தருக. *(02 புள்ளிகள்)*

(b) இப்பிரதேசத்தில் காணப்படும் நான்கு சேவை நிலையங்களைத் தருக. *(02 புள்ளிகள்)*

*2.* தரப்பட்ட உலகப்படத்தில் வழமையான குறியீடுகளையும், நிறங்களையும் பயன்படுத்திப் பின்வருவனவற்றைக் குறித்துப் பெயரிடுக.

(i) அப்பலாச்சியன் மலைத் தொடர்
(ii) எட்னா எரிமலை
(iii) காபன்ரேரி வளை குடா
(iv) தித்திக்காகா ஏரி
(v) குக் தொடு கடல்
(vi) குறைல் நீரோட்டம்
(vii) வெண்கடல்

(viii) கொங்கோ நதி

(ix) உக்ரெயின் நாட்டின் தலைநகரம்

(x) இரும்புத்தாதினை ஏற்றுமதி செய்யும் ஆசிய நாடு *(10 புள்ளிகள்)*

## பகுதி - III

3. (i) தரவு என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

(ii) தரவுகளின் மூன்று வகைகளை உதாரணங்களுடன் விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) தரவுக்கும், தகவல்களுக்குமிடையிலான வேறுபாடுகள் இரண்டினை விளக்குக. *(04 புள்ளிகள்)*

(iv) முதல் நிலைத்தரவுகளைச் சேகரிக்கும் மூன்று நுட்ப முறைகளைக் குறிப்பிடுக. *(03 புள்ளிகள்)*

4. (i) புவியியல் தகவல் முறைமை (GIS) என்றால் என்ன? *(02 புள்ளிகள்)*

(ii) புவியியல் தகவல் முறைமையில் (GIS) இல் பயன்படுகின்ற உள்ளீட்டு மூலகங்கள் மூன்று தருக. *(03 புள்ளிகள்)*

(iii) புவியியல் தகவல் முறைமையின் பிரதான கூறாகிய தரவுகளை வகைப்படுத்தி விளக்கப்படங்களின் உதவியுடன் விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) புவியியல் தகவல் முறையின் பயன்பாடுகள் நான்கு தருக. *(04 புள்ளிகள்)*

5. (i) கருப் பொருள் படம் என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

(ii) கருப் பொருள் படங்கள் தயாரிப்பதற்குப் பயன்படுகின்ற மூன்று நுட்ப முறைகளைத் தருக. *(03 புள்ளிகள்)*

(iii) கருப் பொருள் படங்களின் மூன்று பயன்பாடுகளை விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) பெரிய அளவுத்திட்டப் படத்திற்கும் சிறிய அளவுத்திட்டப் படத்திற்கும் இடையிலான இரண்டு வேறுபாடுகளைக் குறிப்பிடுக. *(04 புள்ளிகள்)*

6. (i) இடவிளக்கப்படம் என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

(ii) 1:50,000 இடவிளக்கப்படத்தின் முகப்பில் உள்ளடக்கப்பட்ட தகவல்கள் இரண்டு, புற எல்லைத் தகவல்கள் இரண்டு தருக. *(04 புள்ளிகள்)*

(iii) 1:50,000 இடவிளக்கப்படத்தில் பயன்படுத்தப்படுகின்ற விடயங்கள் கீழே தரப்பட்டுள்ளது அவற்றை பௌதிக, பண்பாட்டம்சங்கள் எனப் பாகுபடுத்துக.
பள்ளத்தாக்கு, பிரதான வீதிகள், நெற்பயிர்ச்செய்கைப் பிரதேசம், கிளை ஆறுகள், குளம், கணவாய், நீர்ப்பாசனக் கால்வாய், கழிமுகம் *(04 புள்ளிகள்)*

(iv) இலங்கைக்குவரும் சுற்றுலாப்பயணி ஒருவருக்கு படம் பயன்படுகின்ற முறையை நான்கு உதாரணங்களுடன் விளக்குக. *(05 புள்ளிகள்)*

# தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும்
நான்காம் தவணைப் பரீட்சை - 2022
## Conducted by Field Work Centre, Thondaimanaru
4th Term Examination - 2022
FWC


| புவியியல் - II<br>Geography - II | Three Hours<br>Gr. 13 (2022) | 22 | T | II |
|---|---|---|---|---|

மேலதிகவாசிப்பு நேரம் 10 நிமிடங்கள்

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவு செய்வதற்கும் விடை எழுதும் போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள்:**
- ஒவ்வொரு பகுதியிலிருந்தும் குறைந்தபட்சம் இரண்டு வினாக்களையேனும் தெரிவு செய்து எல்லாமாக ஐந்து வினாக்களுக்கு மாத்திரம் விடை எழுதுக.

## பகுதி I பௌதிகப் புவியியல்

1. (i) நீர்க் கோளத்தில் நீர்ப் பரம்பலின் இரண்டு வடிவங்களைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*
   (ii) நீரியல் வட்டத்தின் பிரதான நிலைகளை வரைபடங்களின் உதவியுடன் விபரிக்குக. *(06 புள்ளிகள்)*
   (iii) பூகோள நீர் நெருக்கடியைத் துரிதப்படுத்துகின்ற நான்கு காரணிகளை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*
   (iv) நீர் வளங்களைப் பாதுகாப்பதற்குப் பின்பற்றக்கூடிய மூன்று வழிமுறைகளை ஆராய்க. *(06 புள்ளிகள்)*

2. (i) கரையோரத்தின் குறுக்கு வெட்டு முகத்தினை வரைந்து அதன் வலயங்களைப் பெயரிடுக. *(03 புள்ளிகள்)*
   (ii) அலைகளின் அரித்தல் செயற்பாடுகள் மூன்றினை ஆராய்க *(06 புள்ளிகள்)*
   (iii) அலைகளின் அரித்தல் செயற்பாடுகளால் உருவாக்கப்படும் பின்வரும் மூன்று நிலவுருவங்களை வரைபடங்களின் உதவியுடன் விளக்குக. *(06 புள்ளிகள்)*
   (a) கடற்குகை (b) அலைவெட்டிய மேடை (c) ஊதுளை
   (iv) கரையோரம் அரிக்கப்படுவதனைக் கட்டுப்படுத்துவதற்கு மேற்கொள்ளக் கூடிய மூன்று பாதுகாப்பு நடவடிக்கைகளை விபரிக்குக. *(05 புள்ளிகள்)*

3. (i) "உயிர்ப்பெருந்திணிவு" என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*
   (ii) அயனமழைக்காட்டு உயிர்ப்பெருந்திணிவில் காணக்கூடிய நான்கு இயல்புகளை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*
   (iii) அயனமழைக்காட்டு உயிர்ப்பெருந்திணிவுகள் எதிர் கொள்கின்ற மூன்று அச்சுறுத்தல்களை சுருக்கமாக விபரிக்குக. *(06 புள்ளிகள்)*
   (iv) அயனமழைக்காட்டு உயிர்ப்பெருந்திணிவுகளைப் பாதுகாப்பதற்கு எடுக்கப்பட்டுவரும் மூன்று நடவடிக்கைகளை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

4. (i) இலங்கையின் காலநிலையைப் பாதிக்கும் பூகோளக் காலநிலைக் காரணிகள் இரண்டினைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) இலங்கைக்கு மழைவீழ்ச்சி கிடைக்கின்ற முறைகளைக் குறிப்பிட்டு ஒன்றினை விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) இலங்கையின் பிரதான காலநிலை வலயங்களைப் பெயரிட்டு, இக்காலநிலை வலயங்களில் இரண்டின் நான்கு முனைப்பான அம்சங்களை விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) இலங்கையின் உயர்நில ஈரவலயத்தில் ஏற்படும் பிரதான சூழலியல் இடர்கள் இரண்டினைப் பெயரிடுக. இவ் இடர்களினால் ஏற்படும் தாக்கங்களை இழிவளவாக்குவதற்கு மேற்கொள்ளக்கூடிய இரண்டு நடவடிக்கைகளை ஆராய்க. *(06 புள்ளிகள்)*

## பகுதி II - மானிடப்புவியியல்

5. (i) குடியிருப்பின் பிரதான கூறுகள் நான்கினைப் பெயரிடுக. *(02 புள்ளிகள்)*

(ii) குடியிருப்புக்களின் இரண்டு பிரதான வகைகளைப் பெயரிட்டு அவற்றில் ஒன்றின் பண்புகளை ஆராய்க. *(06 புள்ளிகள்)*

(iii) வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் நகரக்குடியிருப்புக்களுடன் இணைந்து காணப்படும் மூன்று பிரச்சினைகளை உதாரணங்களுடன் ஆராய்க. *(06 புள்ளிகள்)*

(iv) இலங்கையின் பின்வரும் கிராமக் குடியிருப்புக்கள் பற்றி சுருக்கமாக விளக்குக.

(a) மரபு ரீதியான கைத்தொழில்களை அடிப்படையாகக் கொண்ட கிராமங்கள்.

(b) தோட்டக் குடியிருப்புக்கள் *(06 புள்ளிகள்)*

6. (i) நகராக்கம் என்பதனால் கருதப்படுவது யாது? *(02 புள்ளிகள்)*

(ii) உலக நகராக்கப் போக்குகளின் மூன்று பிரதான அம்சங்களை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) வளர்ச்சியடைந்து வரும் நாடுகளில் நகராக்கத்தினைப் பாதிக்கும் மூன்று காரணிகளை ஆராய்க. *(06 புள்ளிகள்)*

(iv) இலங்கையின் நகராக்கமட்டம் குறைவாகக் காணப்படுவதற்குப் பொறுப்பான மூன்று காரணிகளைப் பரிசீலிக்குக. *(06 புள்ளிகள்)*

7. (i) பசுமைப்புரட்சி என்பதனைச் சுருக்கமாக விபரிக்குக. *(02 புள்ளிகள்)*

(ii) பசுமைப்புரட்சியுடன் இணைந்து காணப்படும் விவசாயத்தொழில் நுட்பத்தின் இரண்டு விடயங்களைச் சுருக்கமாக விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) பசுமைப்புரட்சியினால் ஏற்பட்ட மூன்று சூழலியல் தாக்கங்களை விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) இலங்கையின் விவசாயத்துறை எதிர்நோக்குகின்ற மூன்று சாவல்களை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

8. (i) கீழே தரப்பட்டுள்ள கனிய வளங்களை உலோகம், உலோகமல்லாதவை என வகைப்படுத்துக.
இரும்புத்தாது, நிலக்கரி, யுரேனியம், சிலிக்கன், மக்னீசியம் *(02 புள்ளிகள்)*

(ii) வலுச்சக்தியாகக் காணப்படும் நிலக்கரியின் முக்கியத்துவம் தொடர்பாக மூன்று காரணிகளுடாக விளக்குக. *(06 புள்ளிகள்)*

(iii) உலக சுரங்கமறுத்தல் கைத்தொழில் தற்பொழுது எதிர்கொண்டு வரும் நான்கு பிரச்சினைகளைச் சுருக்கமாக விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

(iv) உலக சுரங்கமறுத்தல் கைத்தொழிலின் அண்மைக் காலப்போக்குகள் நான்கினை விபரிக்குக. *(06 புள்ளிகள்)*

தொண்டைமானாறு வெளிக்கள நிலையம் நடாத்தும் நான்காம் தவணைப் பரீட்சை - 2022

தரம் 13 புவியியல் படம் (2 ஆம் வினாவிற்கு உரியது)

